ஐஸ்வர்யா ஜாதகாலயாவில் 75வது சத்திய நாராயணா பூஜை

சென்னை, ஜன. 30–

சென்னை மேற்கு மாம்பலம், ஐஸ்வர்யா ஜாதகாலயாவில் அனைவருக்கும் நடந்தவை, நடப்பவை, நடக்கப்போகும், பொது ஜாதகம், பெயர் ராசி, திருமணப் பொருத்தம், கடன் நிவர்த்தி, கண் திருஷ்டி போன்ற அனைத்திற்கும் பரிகாரங்களுடன் துல்லியமாக கணித்து தீர்வு காணப்படுகிறது.

ஸ்ரீவிஷ்ணு பெருமாள் அவதரித்த பல அவதாரங்களுள் ஸ்ரீ சத்தியநாராயணர் அவதாரமும் ஒன்றாகக் கருதப்படும். பௌர்ணமி திதியில் (பௌர்ணமி நாளில்) ஐஸ்வர்யா ஜாதகாலயத்தால் தொடர்ந்து சத்தியநாரயண பூஜை நடத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 1–ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமியை முன்னிட்டு 75வது ஸ்ரீ சத்திய நாராயணா பூஜை அன்று மாலை 4 மணி முதல் சென்னை மேற்கு மாம்பலம் எண்.55, கவரை

தெரு, ஏ.எம்.ஆர். கல்யாண மண்டபம் அருகில் நடைபெறும். நுழைவு கட்டணம் மற்றும் பிரசாத கட்டணம் எதுவும் இல்லை.

அனைத்து பக்தர்களும் எங்கள் வளாகத்துக்கு நேரில் வந்து பூஜையில் கலந்து கொள்ளலாம். முழு பூஜையில் கலந்து கொள்வதும், புனிதமான ஸ்ரீ சத்தியநாராயண கதையைக் கேட்பதும், இறைவனுக்கு அளிக்கப்படும் பிரசாதத்தை பக்தர்கள் எடுத்துக் கொள்வது மிக நல்லதொரு புண்ணிச் செயலாகவே கருதப்படுகிறது. ஸ்ரீ சத்யநாராயண பூஜையில் பங்கேற்பதன் மூலம் முந்தைய பிறவிகளின் கெட்ட கர்மாக்கள் நிவர்த்தி செய்ய வாய்ப்பு கிடைக்கும், ஒருவரின் வாழ்க்கையின் இலக்குகளை அடைய உதவுகிறது. நீங்கள் தீர்க்க விரும்பும் பிரச்சனைகளை யாவும் பகவான் ஸ்ரீ சத்தியநாராயணரிடம் பிரார்த்தனையாக வைக்கலாம்.

நேரில் வர இயலாதவர்கள் "AISHWARYA JATHAKALAYA" யூடியூப் சேனலில் நேரலையில் பார்த்து, பகவான் ஸ்ரீ சத்தியநாராயணனின் முழு ஆசிர்வாதத்தைப் பெறலாம் என்று ஐஸ்வர்யா ஜாதகாலயா நிறுவன வேத சாஸ்திர ஜோதிடர் கே.எஸ். ரவீந்திரன் கூறியுள்ளார். மேலும் தொடர்புக்கு 98841 41870, 98841 47630 அல்லது வாட்ஸ்ஆப் செய்யலாம்.

ரெயில் பயணிகள் பாதுகாப்பு: ரெயில்வே வாரிய தலைமை இயக்குநர் ஹரி சங்கர் வர்மா ஆலோசனை

சென்னை, ஜன. 30–

ரெயில் பயணிகள் பாதுகாப்பு குறித்து சென்னை கோட்ட அதிகாரிகளுடன் ரெயில்வே வாரிய தலைமை இயக்குநர் (பாதுகாப்பு) ஹரி சங்கர் ஆலோசனை நடத்தினார்.

ரயில்வே வாரியத்தின் தலைமை இயக்குநர் (பாதுகாப்பு) ஹரி சங்கர் வர்மா தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டத்திற்கு வருகை தந்தார். இந்த வருகையின் போது, தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர். என். சிங், கூடுதல் பொது மேலாளர் விபின் குமார் மற்றும் முதன்மை துறைத் தலைவர்கள் உடனிருந்தனர். அனைத்து நிர்வாக நிலைகளிலும் பாதுகாப்பிற்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் ஒரு ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் தெற்கு ரயில்வேயின் முதன்மை தலைமை பாதுகாப்பு அதிகாரி லலித் குமார் மன்சுகானி, சென்னை கோட்ட ரயில்வே மேலாளர் சைலேந்திர சிங் மற்றும் கோட்ட கிளை அதிகாரிகள் பங்கேற்றனர். தெற்கு ரயில்வேயின் பிற கோட்டங்களின் ரயில்வே மேலாளர்களும் காணொளி காட்சி மூலம் இந்த ஆய்வுக் கூட்டத்தில் இணைந்தனர். கூட்டத்தின் போது,

செயல்பாட்டு நம்பகத்தன்மை மற்றும் பயணிகள் பாதுகாப்பை வலுப்படுத்த சென்னை கோட்டம் மேற்கொண்டுள்ள முக்கிய பாதுகாப்பு முன்னெடுப்புகள் குறித்து சைலேந்திர சிங் விரிவான விளக்கக்காட்சியை வழங்கினார். ரயில்வே உள்கட்டமைப்பைத் தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் ஒட்டுமொத்த பாதுகாப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக தண்டவாள பராமரிப்பில் கடைபிடிக்கப்படும் முறையான அணுகுமுறைகளை எடுத்துரைத்தார். மேலும், ரயில் இயக்கத்தின் செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தவும், பாதுகாப்பான ரயில் இயக்கத்தை உறுதி செய்யவும் மேற்கொள்ளப்பட்டு வரும் சிக்னல் அமைப்புகளின் நவீனமயமாக்கல் குறித்தும் அவர் விவரித்தார். உயர் பாதுகாப்புத் தரங்களைப் பராமரிப்பதில் சென்னை கோட்டம் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான மற்றும் முன்னெச்சரிக்கை முயற்சிகளை ஹரி சங்கர் வர்மா பாராட்டினார். பாதுகாப்பு கலாச்சாரத்தை வளர்ப்பது, தொடர் கண்காணிப்பை உறுதி செய்வது மற்றும் வகுக்கப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்றுவது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். பாதுகாப்பான, நம்பகமான மற்றும் பயணிகளுக்கு உகந்த ரயில் சேவைகளை வழங்கும் அதே வேளையில், சிறந்த பாதுகாப்புத் தரங்களை நிலைநிறுத்துவதில் தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது.

சிறந்த சிறுகதை, நாவல், இலக்கியக் கட்டுரை ஆன்மீகப் புத்தகங்களுக்கு ரூ.1.40 லட்சம்: 'கவிதை உறவு' இலக்கியப் பரிசுகள் அறிவிப்பு

மார்ச் 31ந் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஜன.30–

சிறந்த சிறுகதை, நாவல் உள்ளிட்ட சிறந்த நூல்களுக்கு மொத்தம் ரூ. 1,40,000 பரிசுத் தொகையை கவிதை உறவு இலக்கிய அமைப்பு அறிவித்துள்ளது.

முதல் பரிசு ரூ. 5000, 2வது பரிசு ரூ.3000, 3வது பரிசு ரூ. 2000 மொத்தம் 13 பிரிவுகளில் இந்தப் பரிசு வழங்கப்படும் என்று அமைப்பின் நிர்வாகி 'கலைமாமணி' ஏர்வாடி எஸ். ராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ, மனிதநேயம், வாழ்வியல், இளைஞர் நலம், சிறுகதை, செவ்வியல் இலக்கியக் கட்டுரைகள், பொதுக் கட்டுரைகள், குழந்தை இலக்கியங்கள், குறுநாவல்/நாவல், கல்வியியல்/இளைஞர் நலம்/ஆளுமை மேம்பாடு, ஆன்மிகம்/மத நல்லிணக்கம், மகளிர் மேம்பாடு/நலம்/பாதுகாப்பு, குழந்தைகள் எழுதும் நூல்கள் ஆகிய தலைப்புகளில் வெளியான 'புத்தகங்களுக்கு இந்தப் பரிசுகள் வழங்கப்படும்.

ஆறுதல் பரிசும், பாராட்டுச் சான்றிதழும் உண்டு. இந்தத் தலைப்புகளில் பரிசுக்கு அப்பால் சிறந்தவையாகக் கருதப்படும். 10 நூல்களுக்கு ரூ.1000 ஆறுதல் பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறும். இதைக் கல்வியாளர் அருணா தொல்காப்பியன், வழங்குகிறார்.

விதிமுறைகள் : நூல்கள் 2025ல் வெளியானதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தலைப்பிலும் 3 படிகள் அனுப்ப வேண்டும். கடிதப் போக்குவரத்து வேண்டாம். பரிசு பெறாத படைப்புகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

நூல்கள் கிடைத்த விவரம் அறிய தன்முகவரியிட்ட அஞ்சலட்டை அனுப்புக. நூல்கள் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: மார்ச் 31ந் தேதி. முகவரி: எண். 420ணி, மலர்க் குடியிருப்பு, அண்ணாநகர் மேற்கு, சென்னை என்று கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

INDOWIND ENERGY LIMITED

CIN: L40108TN1995PLC032311
REGD Office: "Kothari Buildings" 4th Floor, 114, M.G.Road, Nungambakkam, Chennai- 600 034. Tel: 044-28331310 Email: contact@indowind.com

EXTRACT OF STATEMENT OF UN-AUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 31-12-2025 (Rs. In Lakhs)

Particulars	Consolidated			
	Quarter ended			Year ended
	31-12-2025 (Un-Audited)	30-09-2025 (Un-Audited)	31-12-2024 (Un-Audited)	31-03-2025 (Audited)
Total income from operations (Gross)	619.17	1774.33	828.26	3580.99
Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and Extraordinary Items)	-144.34	453.16	-6.48	350.63
Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and Extraordinary Items)	22.90	453.16	-6.48	350.63
Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and Extraordinary Items)	35.78	457.71	-6.44	126.61
Total Comprehensive Income for the period (Comprising Profit/Loss for the period (after tax) and other comprehensive Income (after tax))	42.14	474.36	2.70	130.15
Paid up Equity Share Capital of Rs.10/- each	16100.22	12880.17	12880.17	12880.17
Reserves (excluding Revaluation Reserve)	-	-	-	14848.50
Earnings Per Share (of `Rs.10/- each) (for continuing and discontinued operations)				
Basic (in Rs.):	0.03	0.37	0.00	0.10
Diluted (in Rs.):	0.03	0.37	0.00	0.10

Note: 1. Additional information on Standalone Financial Results pursuant to Reg. 47 (Rs. In Lakhs)

Particulars	Standalone			
	Quarter ended			Year ended
	31-12-2025 (Un-Audited)	30-09-2025 (Un-Audited)	31-12-2024 (Un-Audited)	31-03-2025 (Audited)
Total income from Operations	448.77	1315.62	572.62	2349.42
Profit / (Loss) Before Tax	170.39	283.00	13.00	175.16
Profit / (Loss) After Tax	183.27	317.55	13.04	16.19
Total Comprehensive Income	183.27	317.55	21.86	170.78

2. The above is an extract of the detailed format of quarterly results for the quarter ended on 31st December 2025 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full formats of the Standalone and Consolidated Financial Results were reviewed by the Audit Committee and approved at the Meeting of the Board of directors of the Company held on 29th January, 2026 and the same are available on the Stock Exchange websites. **(www.bseindia.com / www.nseindia.com)** and Company's Website **www.indowind.com**

The above Results could also be accessed by scanning the below QR code:

Place : Chennai
Date : 29th January, 2026

For **INDOWIND ENERGY LIMITED**
Sd./-
N K Haribabu
Whole-Time Director cum CFO

பாரம்பரிய மருந்துகள் ஆன்லைன் மூலம் விற்பனை:மத்திய அரசு ஒப்பந்தம்

புதுடெல்லி, ஜன.30

நாடு முழுவதும் மளிகைப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை குறுகிய காலத்தில் டெலிவரி செய்யும் நிறுவனமாக ஜெப்டோ உள்ளது. இந்த நிறுவனம் மூலம் ஆயுர்வேதம், யுனானி, சித்தா, ஓமியோபதி (ஆயுஷ்) போன்ற பாரம்பரிய மருந்துகளை விற்பனை செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

எனவே இந்த நிறுவனத்துடன் மத்திய ஆயுஷ் அமைச்சகம் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்திய பாரம்பரிய மருந்துகளின் தரம் மற்றும் நுகர்வோர் நம்பிக்கையை உறுதி செய்யவும், டிஜிட்டல் முறையை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளதாக ஆயுஷ் மந்திரி பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

நீர், அணு, சூரிய ஒளி, காற்றாலை, ஹைட்ரஜன் எரிபொருள்

புதுப்பிக்கத்தக்க மின் திட்டங்களுக்கு கடன் வழங்குவதை விவாதிக்க பரோடா வங்கி சார்பில் கருத்தரங்கு

சென்னை, ஜன.30–

பரோடா வங்கி, இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சுற்றுச்சூழல் அமைப்பு முழுவதிலும் இருந்து முக்கிய பங்குதாரர்களை ஒன்றிணைத்து, நிலையான மின்சாரம் மற்றும் பசுமை நிதி உதவியின் எதிர்காலம் பற்றி விவாதிக்கும் கருத்தரங்கை நடத்தியது.

2030 புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளை நோக்கி முன்னேற்றத்தை மேலும் விரைவுபடுத்துவதற்கான வழிகள் குறித்து ஆலோசித்தது. 'இந்தியாவின் பசுமை வளர்ச்சியை மேம்படுத்துதல்' என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்த உச்சிமாநாட்டில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உருவாக்குநர்கள், பெரு நிறுவனங்கள், உலகளாவிய மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள், மதிப்பீட்டு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் கொள்கை வல்லுநர்கள் உள்பட 125க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

புதுப்பிக்கத்தக்க துறையில் வளர்ச்சி வாய்ப்புகள், புதுமை, இடர் மேலாண்மை மற்றும் மூலதனத் திரட்டல் ஆகியவற்றில் உயர்மட்ட விவாதங்கள் கவனம் செலுத்தின. இந்நிகழ்ச்சியில் பரோடா வங்கியின் இயக்குனரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான தேபடத்த சந்த் பேசுகையில்,

'இந்தியாவின் சுத்தமான எரிசக்தி மாற்றம் இந்த தசாப்தத்தின் மிக முக்கியமான முதலீட்டு வாய்ப்புகளில் ஒன்றாகும். பருவநிலை பொறுப்புடன் மூலதனத்தை வழங்க இந்த வங்கி உதவும் என்றார்.

இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விரிவாக்கத்திற்கு பெரிய அளவிலான மூலதன திரட்டல், புதுமையான நிதி கட்டமைப்புகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள், டெவலப்பர்கள் மற்றும் நிதி நிறுவனங்களிடையே நெருக்கமான ஒத்துழைப்பு தேவைப்படும். இதனால் வளர்ச்சி நிலையானதாகவும் நிதி ரீதியாகவும் சிறப்பாக இருக்கும் என்று கூறினார்.

மாற்று மின்சார ஆதாரமாக இருக்காது....

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இனி ஒரு மாற்று மின்சார ஆதாரமாக இருக்காது, இது இந்தியாவின் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் எதிர்காலத்திற்கு மையமானது. விக்ஸித் பாரத் என்ற தொலைநோக்கு பார்வையை நோக்கி நாடு முன்னேறும்போது நீண்டகால மற்றும் நிலையான நிதி உதவி இந்த மாற்றத்தின் முதுகெலும்பாக இருக்கும். சூரிய, காற்று, நீர், அணு, கலப்பின மற்றும் 24 மணிநேரமும் புதுப்பிக்கத்தக்க திட்டங்களில் சுத்தமான எரிசக்தியை ஆதரிப்பதில் இந்த வங்கி உறுதி பூண்டுள்ளது என்று நிர்வாக இயக்குனர் லலித் தியாகி கூறினார்.

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

equitas Equitas Small Finance Bank

பதிவு அலுவலகம்: 4வது மாடி, ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் 2, 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை-600002
CIN: L65191TN1993PLC025280 | Ph: 044 4299 5000 | https://equitas.bank.in/

டிசம்பர் 31, 2025 வரை முடிவடைந்த மூன்று மாதங்கள் மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(₹ லட்சத்தில்)

வ. எண்	விபரங்கள்	முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த ஒன்பது மாதங்கள்		முடிவடைந்த வருடம்
		டிசம்பர் 31, 2025	செப்டம்பர் 30, 2025	டிசம்பர் 31, 2024	டிசம்பர் 31, 2025	டிசம்பர் 31, 2024	மார்ச் 31, 2025
		தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது
1	செயலாக்கங்களிருந்து மொத்த வருமானம்	198,113.42	184,629.26	185,033.92	576,797.66	535,379.84	722,321.41
2	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் / (நட்டம்) வரி, மற்றும் வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்கு முன்	11,372.56	3,353.81	8,974.05	(15,021.62)	14,556.10	19,884.91
3	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் / (நட்டம்) வரிக்கு முன் மற்றும் வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்குப் பின்	11,372.56	3,353.81	8,974.05	(15,021.62)	14,556.10	19,884.91
4	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் / (நட்டம்) வரி, வழக்கத்திற்கு மாறான/அசாதாரண வகைகளுக்குப் பின்	9,002.78	2,413.53	6,630.24	(10,960.02)	10,494.22	14,704.99
5	இக்காலத்திற்குரிய மொத்த விரிவான வருமானம் ((இலாபம் / (நட்டம்) உள்ளடக்கியது (வரிக்கு பின்) மற்ற இதர விரிவான வருமானம் (வரிக்குபின்))	குறிப்பு (ii) பார்க்கவும்	குறிப்பு (ii) பார்க்கவும்	குறிப்பு (ii) பார்க்கவும்	குறிப்பு (ii) பார்க்கவும்	குறிப்பு (ii) பார்க்கவும்	குறிப்பு (ii) பார்க்கவும்
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம்	114,071.99	114,050.42	113,932.15	114,071.99	113,932.15	113,986.24
7	காப்புநிதிகள் மறுமதிப்பீட்டு காப்புநிதிகள் தவிர்த்து (சென்ற வருட இருப்பு நிலையின் படி)	–	–	–	–	–	493,265.79
8	பத்திரங்களின் பிரீமியம் கணக்கு	277,903.54	277,817.51	277,292.61	277,903.54	277,292.61	277,502.60
9	நிகர மதிப்பு (மறு மதிப்பீடு காப்பு நிதி & புலனாகாத சொத்துக்கள் தவிர்த்து)	538,359.93	532,319.03	553,805.53	538,359.93	553,805.53	559,257.61
10	நிலுவையில் உள்ள மீட்க கூடிய முன் உரிமை பங்குகள்	–	–	–	–	–	–
11	கடன் பங்கு விகிதம்	0.51	0.44	0.26	0.51	0.26	0.23
12	தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயலாக்கங்கள் ஈட்டிய பங்கு (₹ 10) ஒன்றுக்கான வருவாய் (மூன்று மாதங்கள்/ ஒன்பது மாதங்கள், வருடாந்திரம் அல்ல)						
(i)	அடிப்படை (₹)	0.79	0.21	0.58	(0.96)	0.92	1.29
(ii)	குறைமதிப்பு (₹)	0.79	0.21	0.58	(0.96)	0.92	1.29
13	மூலதனம் மீட்பு காப்பு	–	–	–	–	–	–
14	மொத்த கடன் – மொத்த சொத்து விகிதம்	7.71%	6.23%	4.78%	7.71%	4.78%	4.04%

குறிப்பு:

(I) மேற்குறிப்படப்பட்டவைகள் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015-ன், விதி 33 மற்றும் விதி 52 மற்றும் விதி 63(2)-ன் படி பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று மாதங்கள் / ஒன்பது மாதங்களுக்கான தாக்கல் செய்யப்பட்ட முழுவடிவிலான நிதிநிலை முடிவுகளின் சுருக்கப்பட்ட வடிவம் ஆகும். மூன்று மாதங்கள் / ஒன்பது மாதங்களுக்கான தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் வங்கியின் **ir.equitas.bank.in** என்ற இணையதளத்திலும், பங்குவர்த்தக நிறுவனத்தின் **www.nseindia.com & www.bseindia.com** என்ற இணையதளங்களிலும் காணலாம்.

(ii) இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் மற்றும் இதர வருமான விபரங்கள் வங்கிற்கு IndAS இதுவரை பொருந்தாததால் தெரிவிக்கப்படவில்லை.

இடம் : சென்னை
தேதி : ஜனவரி 29, 2026

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்காக
sd. வாசுதேவன் PN, நிர்வாக இயக்குனர் மற்றும் முதன்மை செயல் அதிகாரி

Bharathanatya Arangetram

Kumari. Adhya Venkatesan

Disciple of "Nrithya kala Nipuna"

Guru. Dr. Smt. Kanchana Janardhanan

Saturday, January31st
from 9.30 am onwards

at Vani mahal, T.nagar
Chennai

Guest of Honour

Sri. Veeramani Siva Subramaniam
(Grandson of Puratchi Kavignar Bharathidhasan)

Kalaimamani "Makkal Kural"
Sri. Ramji

Smt. VRG.Raji Managing Trustee,
Mayilai Poompavai Sabha Trust,Chennai

All are Welcome!!